# தவக்காலம் 3ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு பலிக் கொண்டாட்டத்திற்கு வந்துள்ள, உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். இன்று கடவுளின் கோபத்தைச் சொல்லும் ஞாயிறாக அமைந்துள்ளது.

மக்களை மதிக்காத வியாபாரம், புனிதத்தை கெடுக்கும் வியாபாரம் இவற்றை கண்டு உள்ளம் குமுறியவராக, சாட்டையால் விரட்டியடிக்கிறார்.

இன்றைக்கு திருத்தலங்கள் இத்தகைய நிலைக்கு தள்ளப்படுவது யாரால்? அதனுடைய புனிதத் தன்மையை காக்க வேண்டியது நம் எல்லாரின் பொறுப்பு என்பதனை உணர்ந்து செயல்படுத்தப் போவது எப்பொழுது?

வியாபாரத்தில் உள்ளோரும் இன்று தங்களையே கேட்டுப் பார்த்துக் கொள்ள முன்வருவது நல்லது. பணம் தான் பிரதானமா? மனித மாண்பும், நலமும், மனித வளமையும் அக்கறையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதனை உணர்ந்து செயல்பட முன்வர வேண்டியது காலத்தின் கட்டாயம். இத்தகைய சிந்தனைகளை உள்வாங்கியவர்களாக பலியிலே பங்கேற்று செபிப்போம்.

### முதல் வாசக முன்னுரை (விடுதலைப் பயணம் 20:1-17)

யாவே இறைவன் இஸ்ரயேல் மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாக பத்துக்கட்டளைகளை கொடுக்கிறார். பத்துக்கட்டளைகள் உடன்படிக்கை என்னும் மோதிரத்தில் பதிக்கப்பட்ட வைரக்கற்களாகும். அவற்றை மீறுவது பாவம் மட்டுமல்ல மாறாக உடன்படிக்கையை மீறுவதாகும் என்ற சிந்தனையோடு இந்த வாசகத்தை கேட்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை (1 கொரிந்தியர் 1 : 22-25)

இறைவனின் சாயலில் படைக்கப்பட்ட மனிதனின் சொல்லும், செயலும் இறைவனை மட்டுமே நாடி இருக்கவேண்டும். ஆனால் நாம் பலவற்றை நாடிக்கொண்டிருக்கிறோம் என்றும், கடவுளை நாடுவோருக்கு வல்லமையும், ஞானமும் கிடைக்கும் என்று கூறும் இவ்வாசகத்தைக் கேட்போம்.

## மன்றாட்டுக்கள்

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. தந்தையின் திருமகனே! திருஅவையை சுத்தப்படுத்த பொறுப்பாளர்கள் எடுக்கும் எல்லா முன் முயற்சிகளிலும், நாங்கள் புரிந்துணர்வு கொண்டவர்களாக இருந்து உதவிட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. தந்தையின் திருமகனே! தூய்மை இந்தியா என்பது, நேரிய நிலையில், உண்மையை கொணடதாக, நீதியை உள்ளடக்கியதாக அமைய, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. தந்தையின் திருமகனே! உமது ஆலய சந்நிதானத்தை எப்பொழுதும், பரிசுத்தமாக கருதி, நடந்து கொள்ள, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. தந்தையின் திருமகனே! உடலாகிய ஆலயத்தையும் எவ்வித மாசுமின்றி காத்துக் கொள்ள, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. தந்தையின் திருமகனே! நீர் தந்த கட்டளைகளை கோட்பாடுகளை உயர்வாக போற்றி, கடைப்பிடித்து வாழ்ந்திட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com